வகுப்பு : 12 ஒரு மதிப்பெண் தேர்வு – 1 மதிப்பெண்கள்: 40

தமிழ் காலம் : 45 நிமிடங்கள்

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 34 x 1 = 34

1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் ________
அ) சூரிய நிழல் ஆ) ஒளிப்பறவை இ) சர்ப்பயாகம் ஈ) ஒரு கிராமத்து நதி

2. "பாண்டியரின் சங்கத்தில் கொலுவி ருந்தாய்
பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்" இவ்வடிகளில் இடம்பெற்ற தொடை நயம் ________.
அ) அடி எதுகை, அடி இயைபு ஆ) அடி மோனை, அடி எதுகை
இ) அடி மோனை, அடி இயைபு ஈ) அடி எதுகை, அடி மோனை

3. 'தாழுழைக்கும் தொழிலாளர் வியர்வை வெள்ளம்' - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லுக்கான இலக்கணக் குறிப்பு ________.
அ) அடுக்குத்தொடர் ஆ) உருவகம் இ) பண்புத்தொகை ஈ) வினையெச்சம்

4. சிற்பி. பாலசுப்பிரமணியம் சாகித்திய அகாதெமி விருது பெற்ற இலக்கியங்கள் ________.
அ) மொழிபெயர்ப்பு, கவிதை ஆ) கவிதை, சிறுகதை இ) மொழிபெயர்ப்பு, சிறுகதை ஈ) நாடகம், கட்டுரை

5. "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" இவ்விதிப்படி புணரும் சொல்
அ) வானம் + எல்லாம் ஆ) உன்னை + அல்லால் இ) செம்மை + தமிழே ஈ) செம்மை + பரிதி

6. விம்முகின்ற - இச்சொல்லைப் பிரிக்கும் முறை
அ) விம்மு + கிறு + இன் + அ ஆ) விம்மு + கின்று + அ இ) விம்மு + கிறு + அ ஈ) விம்மு + கின்ற

7. கீழ்க்கண்டவற்றுள் சிற்பியின் உரைநடை நூல் ________.
அ) பூஜ்யங்களின் சங்கிலி ஆ) ஒளிப்பறவை இ) அலையும் சுவடும் ஈ) சர்ப்பயாகம்

8. தமிழ்மொழியின் நடை அழகியல் ________.
அ) பாரதியார் ஆ) சிற்பி. பாலசுப்பிரமணியம் இ) உத்தமசோழன் ஈ) தி.சு. நடராசன்

9. திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர் ________.
அ) தி.சு. நடராசன் ஆ) பூமணி இ) சிற்பி ஈ) உ.வே.சா

10. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல் ________.
அ) தண்டியலங்காரம் ஆ) தொல்காப்பியம் இ) வீரசோழியம் ஈ) இலக்கண விளக்கம்

11. பொருத்துக:
அ) இலாத - 1. வினையாலணையும் பெயர்
ஆ) உயர்ந்தோர் - 2. இடைக்குறை
இ) வெங்கதிர் - 3. அடுக்குத்தொடர்
ஈ) முத்துமுத்தாய் - 4. பண்புத்தொகை
அ) 2,4,1,3 ஆ) 2,1,4,3 இ) 2,1,3,4 ஈ) 4,3,2,1

12. இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது ______
அ) உவமையணி ஆ) பொருள் வேற்றுமை அணி இ) உருவக அணி ஈ) தன்மை அணி

13. காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல் ________.
அ) தொல்காப்பியம் ஆ) மாறனலங்காரம் இ) நன்னூல் ஈ) தண்டியலங்காரம்

14. தண்டியலங்காரம் ________ பெரும் பிரிவுகளை உடையது.
அ) ஆறு ஆ) நான்கு இ) ஏழு ஈ) மூன்று

15. வம்சமணி தீபிகை என்னும் நூலை 1879 - ல் வெளியிட்டவர் ________.
அ) சு. நெல்லையப்பர் ஆ) இளசை மணி இ) கவிகேசரி ஈ) பாரதியார்

16. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலகாரிகை ஆ) தொல்காப்பியம் இ) தண்டியலங்காரம் ஈ) நன்னூல்

17. 'பாரதி வாழ்த்து' என்ற நூலை இயற்றியவர் ________.
அ) பரலி சு. நெல்லையப்பர் ஆ) சாமி தீட்சிதர் இ) இளசை மணி ஈ) அ. பத்மநாபன்

18. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம் ________.
அ) அடி மோனை, அடி எதுகை ஆ) சீர் மோனை, சீர் எதுகை
இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடி மோனை

19. கீழ்க்கண்டவற்றுள் தொகைமொழி எது?
அ) வைகுறு ஆ) நெடுநீர் இ) சடங்கு ஈ) நடை
(I) அ,இ (II) அ,ஆ (III) இ,ஈ (IV) ஆ,ஈ

20. 'நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை' - இவ்வடி இடம் பெற்றுள்ள புறநானூறு ஒரு________நூல்
அ) சிற்றிலக்கியம் ஆ) பத்துப்பாட்டு இ) நீதி ஈ) எட்டுத்தொகை

21. "மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்,
க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
உ) பொதிகையில் தோன்றியது
ங) வள்ளல்களைத் தந்தது
அ) க மட்டும் சரி ஆ) க,உ இரண்டும் சரி இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

22. கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
கருத்து 2: தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

23. பொருத்துக.
அ) தமிழ் அழகியல் - 1) பரலி.சு.நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ - 2) தி.சு நடராசன்
இ) கிடை - 3) சிற்பி பாலசுப்ரமணியம்
ஈ) உய்யும் வழி - 4) கி.ராஜநாராயணன்
அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1

24. சிற்பி ___________ பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்.
அ) பாரதியார் ஆ) பெரியார் இ) பாரதிதாசன் ஈ) காமராசர்

25. "கடந்தடு தானை மூவிருங் கூடி" - இவ்வடியில் அதிகமாக அமைந்துள்ளவை ________
அ) மெல்லின மெய்கள் ஆ) வல்லின மெய்கள் இ) இடையின மெய்கள் ஈ) ஒற்றுகள்

26. நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச் சடங்கு பாடலில் நம்பியின் ______ பண்புகள் இடம்பெற்றுள்ளன.
அ) 18 ஆ) 26 இ) 14 ஈ) 10

27. ஓங்கலிடை என்னும் பாடல், தமிழுக்கும் _____ இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையைக் கூறுகிறது.
அ) கடலுக்கும் ஆ) கதிரவனுக்கும் இ) வானுக்கும் ஈ) மண்ணுக்கும்

28. தமிழ் நாட்டில் வீதிதோறும் _______ மலிய வேண்டும் என்று பாரதி கூறுகிறார்.
அ) தொழிற்சாலைகள் ஆ) கோவில்கள் இ) தமிழ்ப்பள்ளிகள் ஈ) குளங்கள்

29. 'பாரதியின் கடிதங்கள்' – என்ற இந்நூலைப் பதிப்பித்து வெளியிட்டவர் _______
அ) இளசை மணி ஆ) பரலி. சு.நெல்லையப்பர் இ) ரா.அ.பத்மநாபன் ஈ) பாரதியார்

30. ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்களில் குறிப்பிடும் நாவல் _________
அ) அஞ்ஞாடி ஆ) பிறகு இ) வயிறுகள் ஈ) கிடை

31. பிழையான தொடரைக் கண்டறிக.
(i) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்
(ii) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்
(iii) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது
(iv) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.
அ) i,ii,iv மட்டும் ஆ) ii மட்டும் இ) i மட்டும் ஈ) iii மட்டும்

32. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும் ஆ) புத்தக் கண்காட்சி நடைபெறுகிறது.
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.
(i) அ மட்டும் (ii) ஆ மட்டும் (iii) ஈ மட்டும் (iv) இ மட்டும்

33. நாம் வலிமை பெறுவதற்கான வழி என்று பாரதி எதை கூறுகிறார்?
அ) பெண்ணைத் தாழ்மை செய்தல் ஆ) நம்மினும் மெலியார்க்கு இரங்கி சமநிகர் செய்தல்
இ) பெண்ணை அடைத்தல் ஈ) நம்மினும் மெலியார்களைத் தாழ்வு செய்தல்
(i) இ, ஈ மட்டும் (ii) ஆ மட்டும் (iii) அ மட்டும் (iv) எதுவுமில்லை

34. இ ஈ ஐ வழியவ்வும் என்பது ________ புணர்ச்சி
அ) குற்றியலுகரம் ஆ) உடம்படுமெய் இ) திசைப்பெயர் ஈ) பண்புப்பெயர்

II மொழிப்பயிற்சி இலக்கணப் பயிற்சி. 3 x 2 = 6

35. உவமைத் தொடரைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.
அ) கிணற்றுத்தவளை போல

36. கலைச் சொல்லாக்கம் தருக. அ) Subscription ஆ) Biography

37. தமிழாக்கம் தருக.
அ) A new language is a new life. ஆ) Learning is a treasure that will follow its owner everywhere.